சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:–07.01.2022

**<u>அவசரக்கூட்டம்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, பிலவ வருடம் மார்கழி மாதம் 23–ஆம் நாள் (ஜனவரி திங்கள் 07–ஆம் நாள்:–07.01.2022) வெள்ளிக் கிழமையன்று காலை 11.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

வழக்கு எண்.14044 to 14047–இல் வழுங்கப்பட்ட தீர்ப்பின்படி, சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட விஸ்வன்குளம் பகுதி (ஊரணியில்) உள்ள ஆக்கிரமிப்புகளை **29.12.2021**ம் நாளன்று காவல் துறை, வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வருவாய்த் துறையுடன் இணைந்து அகற்றப்பட்டதினை எதிர்த்து திரு.G.சுந்தரமூர்த்தி என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD) No.**23319/2021** என்ற வழக்கில், நகராட்சி ஆணையாளரை எதிர்வாதியாக சேர்த்து தொடரப்பட்ட வழக்கு **31.12.2021**ம் நாளன்று சிறப்பு பெஞ்ச் விசாரணையில் எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரணை செய்ததிற்கு நகராட்சியின் சார்பாக திரு.கே.ஹேமகார்த்திகேயன், MA., BL., வழக்கறிஞர் என்பவர் நகராட்சி ஆணையாளர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி தகுந்த ஆதாரங்களை சமர்ப்பித்து உரிய விளக்கமளிக்கப்பட்டதினை தொடர்ந்து மேற்படி வழக்கானது தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பாக நகராட்சியின் வழக்கறிஞர் வழக்கு கட்டணமாக ரூ.**10000/–** மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் அரசு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.**15000/–** ஆக மொத்தம் ரூ.**25000/–** செலவின தொகையினை சம்மந்தப்பட்ட வழக்கறிஞர்களுக்கு வழங்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.87/2016/எப்1)**
**தீர்மான எண், நாள்** **447, நாள்.07.01.2022**

*******

**பொருள் எண்.2**

சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் **05.01.2022–**ஆம் நாளிட்ட ந.க.**31113/2021**/அம்ரூத்–2 எண் கடிதத்தில் **2021–2022–**ஆம் ஆண்டிற்கான **15–**வது நிதிக்குழு மான்யம் Untied Grant திட்டத்தின் கீழ் ரூ.**58.00** இலட்சத்தில் வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறி முறைகளைப் பின்பற்றி சின்னமனூர் நகராட்சியில் மேற்கொள்ள வேண்டிய கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Construction of Small bridge at Ward No.6 Ayyankoil Street Chainage at 1/120m (Unicode No.121005R198) | 10.00 |
| 2. | Construction of Small bridge at Ward No. 27 Alagarsamy Nagar Chainage at 1/30m (Unicode No.121022R409) | 10.00 |
| 3. | Construction of PTR Channel bridge Chainage at 1/138m at Ward No. 4 (Unicode No.121004R123) | 10.00 |
| 4. | Improvement Works to Drain and Paverblock Roads (WS and UGD Internal Plumping works, Burst and Due to rain) at Ward 7,8 | 10.00 |
| 5. | Improvement Works to Drain and Paverblock Roads (WS and UGD Internal Plumping works, Burst and Due to rain)at Ward 6 | 10.00 |
| 6. | Improvement works to Cement concrete Roads due to UGD and Water supply works (WS and UGD Internal Plumping works, Burst and Due to rain) at Ratha veethi and other areas | 8.00 |
| | **மொத்தம்** | **58.00** |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1.மேற்கண்ட பணிகளை செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். 2.அனுமதிக்கப்பட்ட மான்ய தொகையைவிட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். (0143/2022/இ1) |
| தீர்மான எண், நாள் | 448, நாள்.07.01.2022 |
| தீர்மானம் | |

*******

## பொருள் எண்.3

சின்னமனூர் நகராட்சிக்கு 2020–2021–ஆம் ஆண்டிற்கான 15–வது நிதிக்குழு மான்யம் Untied Grant திட்டத்தின் கீழ் ரூ.141.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதத்தின்படி நிதி ஒதுக்கீடு வரப்பெற்றுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் மின்சார வாரியத்திற்கு மின்கட்டணம் செலுத்திய போக ரூ.49.55 இலட்சத்திற்கு வெளியிடப்பட்ட வழிகாட்டு நெறி முறைகளைப் பின்பற்றி சின்னமனூர் நகராட்சியில் மேற்கொள்ள வேண்டிய கீழ்க்கண்ட பணிகளை செய்வதற்கு மதிப்பீடு தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் விவரம் | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | Construction of Storm Water Drain at Lakshmi Nagar, Markayankottai Main road in Chinnamanur Municipality (Unicode No.121024R476) - Length-280m | 10.00 |
| 2. | Construction of Mini Treatment Plant with Drain Arrangement at Lakshmi Nagar East Side in Chinnamanur Municipality (Unicode No.121024R466) - Length-280m | 10.00 |
| 3. | Prividing Fencing for Viswankulam Water Body (Ward No.A, Block No.14, T.S.No.4/1,Old Survey No.289/1) in Chinnamanur Municipality - 6400sqm | 10.00 |
| 4. | Construciton of Storm Water Drain at Kannammal Garden in Chinnamanur Municipality (Unicode No.121002R31) Length-280m | 10.00 |
| 5. | Construciton of Storm Water Drain at Daily Market Street in Chinnamanur Municipality (Unicode No.121019R387) L=400m) Length-280m | 10.00 |
| | மொத்தம் | 50.00 |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மேற்கண்ட பணிகளை செய்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம். 2. அனுமதிக்கப்பட்ட மான்ய தொகையைவிட கூடுதலாகும் செலவினத் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம். (4426/2020/இ1) |
| தீர்மான எண், நாள் | 449, நாள்.07.01.2022 |
| தீர்மானம் | |

*******

**பொருள் எண்.4**

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு புதிதாக பதவி ஏற்றுள்ள அரசு அனைத்து நகராட்சிகளுக்கும் அரசு வழக்கறிஞர்களை நியமனம் செய்து உத்திரவிட்டுள்ளது. மேற்படி அரசு வழக்கறிஞர்கள் நியமனம் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டு அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் மின்னஞ்சல் கடிதத்தில் சின்னமனூர் நகராட்சிக்கு நகராட்சி வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக ஆஜராவதற்கு சின்னமனூரைச் சேர்ந்த திரு.அருண் ஜவஹர் என்பவரை நியமனம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. அன்னாரின் நியமனத்தை நகர்மன்ற ஒப்புதல் பெறும் பொருட்டு மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | **மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.375/2022/சி1)** |
| **தீர்மான எண், நாள்** | **450, நாள்.07.01.2022** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டப்பணி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அரசாணை எண்.19, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.12.2009இன்படி திருத்திய நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, ரூ.14.52 கோடி மதிப்பீட்டில், ஒப்படைப்பு பணியாக இரண்டு சிப்பங்கள் நிறைவு செய்யப்பட்டு, மேற் பராமரிப்புப் பணிக்கு, சோதனை ஓட்டம் நிறைவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பாதாள சாக்கடைத் திட்டத்தின் கீழ் நகரில் 32.123 கி.மீட்டர் நீளத்திற்கு பைப்லைன் பதிக்கப்பட்டுள்ளதுடன், வார்டு எண்.2–இல் இராதா கிருஷ்ணா ரைஸ்மில் தெருவில், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்திற்கான பராமரிப்பு பணிக்கென பணியாளர்கள் நகராட்சியில் இல்லாத காரணத்தினால், கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய பராமரிப்பிற்கும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப் பணிகளாக பராமரிக்கப்பட்டு வருகிறது. அதன்படி பிப்ரவரி 2022 முதல் மேற்படி பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:-** | **1.மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2.மேற்படி செலவினத்தை பாதாள சாக்கடைத் திட்ட நிதியில் மேற்கொள்ளலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **451, நாள்.07.01.2022** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.6**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரம் இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் உருவாகும் மக்கும் குப்பைகளை உரமாக்குவதற்கான (MCC) நுண்ணுயிர் உரக்கிடங்கில் தேவையான அடிப்படை வசதிகளான EM Solution தயாரித்தல் போன்ற பணிகள் அவ்வப்போது தயாரித்தல் போன்ற பணிகள் அவ்வப்போது செய்வதற்கான தோராய செலவினம் ரூ.50000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4623/2021/எச்1)**
**தீர்மான எண், நாள்** **452, நாள்.07.01.2022**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்7**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரம் கொரோனா தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக வாரவாரம் தடுப்பூசி முகாம் நடைபெற்று வருகின்றது. மேற்படி முகாம் ஏற்பாட்டிற்கான பொதுவான செலவினங்கள் (ஆட்டோ விளம்பரங்கள், விளம்பர பலகைகள், பணியாளர்களுக்கான உணவு, டீ, வடை மற்றும் இதர செலவினங்கள்) மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேற்படி செலவினங்கள் மேற்கொள்வதற்கு தோராயமாக ரூ.2,00,000/—க்கு அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4555/2021/எச்1)**
**தீர்மான எண், நாள்** **453, நாள்.07.01.2022**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்8**

இந்நகராட்சி அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, பாதாள சாக்கடை சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குளங்கள் ஆகியவற்றை Top View Photos-Drone Camera கொண்டு எடுக்கும் பணி மேற்கொள்ள **17.12.2021**ம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | பிரபாத் டிஜிட்டல் ஸ்டுடியோ, சின்னமனூர் | 10800/— |
| 2. | செந்தில் ஸ்டுடியோ, சின்னமனூர் | 12100/— |

அலுவலகக் குறிப்பு:— **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1—இல்காணும் பிரபாத் டிஜிட்டல் ஸ்டுடியோ சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், அன்னாரின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4832/2021/இ1)**
**தீர்மான எண், நாள்** **454, நாள்.07.01.2022**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்9**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது கொரோனா நோய்த் தொற்று பரவி வருவதால் இந்நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்க 500 கையுறைகள் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.70,000/—க்கும், கிருமிநாசினியாக உபயோகிக்க 140 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் வாங்கவும் அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4,90,000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3730/2021/எச்1)**

**தீர்மான எண், நாள்** **455, நாள்.07.01.2022**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்10**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட விவரப்படியான உரிம இனங்கள், அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.09.2008—இன்படி, 2021—2022ம் நிதியாண்டுடன் மூன்றாண்டுகள் நிறைவு பெறுகின்றன. இதனால் கீழ்க்கண்ட உரிம இனங்களை 01.04.2022 முதல் மூன்றாண்டுகளுக்கு ஏலம் —உடன்—ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்படைக்கலாம்.

| வ.எண். | ஏலம் விடப்படும் உரிம இனங்களின் விவரம் | ஏலம் கேட்கும் முன் செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை | ஏலம் கேட்கும் முன் தாக்கல் செய்ய வேண்டிய சொத்து மதிப்பு சான்று | சான்று அளிக்காவிடில் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | நேருஜி பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 400000 | 500000 | 100000 |
| 2. | நேருஜி பேருந்து நிலையத்தில் வடக்குப் பக்கம் உள்ள 6 இருக்கைகள் கொண்ட கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50000 | 100000 | 50000 |
| 3. | நேருஜி பேருந்து நிலையத்தில் தெற்குப் பக்கம் உள்ள 8 இருக்கைகள் கொண்ட கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50000 | 100000 | 50000 |
| 4. | நேருஜி பேருந்து நிலையத்தில் தெற்குப் பக்கம் உள்ள காலியிடத்தில் இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 50000 | 100000 | 50000 |
| 5. | பழைய நகராட்சி அலுவலக வணிக வளாகத்தில் வடக்குப் பக்கம் உள்ள கட்டணக் கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 300000 | 500000 | 100000 |

அலுவலகக் குறிப்பு:– 1. மேற்கண்ட உரிம இனங்களில் வரிசை எண்.1 முதல் 5 வரை உள்ளவற்றை ஒப்படைக்கும் நாள்முதல் மூன்றாண்டு காலத்திற்கு பொது ஏலம் உடன் ஒப்பந்தப்புள்ளி முறையில் ஏலம்விட அனுமதிக்கலாம்.
2. 2021–2022ம் ஆண்டிற்கான பொது மற்றும் தனி உரிமக் கட்டுப்பாடுகள் நிபந்தனைகள் மற்றும் விலை நிர்ணயப் பட்டியல்களையும் அங்கீகரிக்கலாம்.
3. மேற்படி ஏல நடவடிக்கைகளுக்கான உத்தேச செலவினம் ரூ.50000/–க்கு அனுமதிக்கலாம்.

தீர்மான எண், நாள் 456, நாள்.07.01.2022

தீர்மானம்

*******

## பொருள் எண்11

சின்னமனூர் நகராட்சியின் புதிய அலுவலக கட்டிடத்தில், ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த கேமராக்கள் முற்றிலும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளன. தற்பொழுது உள்ளாட்சி தேர்தல் 2022 அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதால், நகராட்சி அலுவலகம் மற்றும் வளாகம் முழுவதும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி கண்காணிக்க வேண்டியுள்ளதால், மேற்படி அனைத்து இடங்களிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1,42,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாாம.
2. மேற்படி பணிக்கு ஆகும் செலவினம் முழுவதையும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.
3. அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் கோரியுள்ள அலுவலக நடைமுறையினை ஏற்கலாம்.

தீர்மான எண், நாள் 457, நாள்.07.01.2022

தீர்மானம்

*******

## பொருள் எண்12

இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் பொது நிதி பணிகள் மற்றும் திட்டப்பணிகளுக்கு ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்படும் வருமானம் வரியினை Tax deducted at source (TDS ) Return தனியார் நிறுவனம் மூலம் File செய்ய 2021–2022–ஆம் நிதியாண்டிற்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.30000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தீர்மான எண், நாள் 458, நாள்.07.01.2022

தீர்மானம்

*******

**பொருள் எண்13**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.19–இல் உள்ள விஸ்வன்குளம் மற்றும் தினசரி மார்க்கெட் தெருவில் பல வருடங்களாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்றுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், விஸ்வன்குளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நீர்நிலை ஆக்கிரமிப்பு மற்றும் தினசரி மார்க்கெட் தெருவில் போக்குவரத்திற்கு இடையூறாக அமைக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டன. மேற்படி பணிக்கு பயன்படுத்தப்பட்ட ஜே.சி.பி வாகனத்துடன் கூடிய இயந்திரம் மற்றும் இழுவை உழுவை (Tractor with Trailor) வாகனம் பயன்படுத்தியமைக்குரிய உத்தேச செலவு ரூ.75000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **செலவினம் முழுவதையும் வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**
3. **அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொடர்பான அலுவலக நடைமுறையினை ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **459, நாள்.07.01.2022**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்14**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting Auto வாகன எண்.TN60Q4963க்கு FC முடிவடைவதால், புதிய FC எடுப்பதற்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள **10.12.2021**ம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.28330/– |
| 2. | ஸ்ரீ சிவகாமி லேத் & வெல்டிங் இன்ஜினியரிங் ஒர்க்ஸ, சின்னமனூர் | ரூ.31030/– |

அலுவலகக் குறிப்பு:– **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல்காணும் பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**

**(ந.க.எண்.3462/2017/இ2)**

**தீர்மான எண், நாள்** **460, நாள்.07.01.2022**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்15**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting Auto வாகன எண்.TN603761க்கு FC முடிவடைவதால், புதிய FC எடுப்பதற்கு சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ள **10.12.2021**ம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் | ரூ.45300/– |
| 2. | ஸ்ரீ சிவகாமி லேத் & வெல்டிங் இன்ஜினியரிங் ஒர்க்ஸ, சின்னமனூர் | ரூ.48650/– |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல்காணும் பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், பெருமாள் டிராக்டர் ஒர்க்ஸ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0324/2014/இ2)

**தீர்மான எண், நாள்** **461, நாள்.07.01.2022**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்16**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் குடிநீர் பிரதானக் குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை சரி செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.445, நாள்.31.12.2021ம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 06.01.2022ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.31250/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.31478/– |

**அலுவலகக் குறிப்பு:–** வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல்காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4872/2021/இ2)

**தீர்மான எண், நாள்** **462, நாள்.07.01.2022**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்17**

இந்நகராட்சி பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் குடிநீர் பிரதானக் குழாய்களில் ஏற்படும் நீர் கசிவுகளை சரி செய்யும் பணிக்கு நகர்மன்றத் தீர்மான எண்.444, நாள்.31.12.2021ம் தேதி அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணியை செய்வதற்கு 06.01.2022ம் தேதி விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு, மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | தொகை |
|---|---|---|
| 1. | திரு.கே.வனராஜ், சின்னமனூர் | ரூ.38936/– |
| 2. | திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி | ரூ.39063/– |

**அலுவலகக் குறிப்பு:–** **வரப்பெற்ற இரு விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1–இல்காணும் திரு.கே.வனராஜ், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியின் தொகை குறைவாக இருப்பதால், திரு.கே.வனராஜ், ஒப்பந்தக்காரர், சின்னமனூர் அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.**
**(ந.க.எண்.4871/2021/இ2)**

**தீர்மான எண், நாள்** **463, நாள்.07.01.2022**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்18**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.19–இல் உள்ள விஸ்வன்குளம் நீர் நிலைப் பகுதியில் பல வருடங்களாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளன. வழக்கு எண்.W.P.(MD) No.14047/2019 வரப்பெற்ற தீர்ப்பின்படி, மேற்படி ஆக்கிரமிப்புகளை வருவாய் துறை மற்றும் காவல் துறையுடன் இணைந்து 29.12.2021ம் நாளன்று ஆக்கிரமிப்புகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டனன மேற்படி பணிக்கு பயன்படுத்தப்பட்ட ஜே.சி.பி வாகனத்துடன் கூடிய இயந்திரம் டிராக்டர் வாகனம் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக வீடியோ காட்சிகள் பதிவு செய்தல் போன்ற பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவு ரூ.1,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. செலவினம் முழுவதையும் வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**
**3. அவசர அவசியம் கருதி, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொடர்பான அலுவலக நடைமுறையினை ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **464, நாள்.07.01.2022**

**தீர்மானம்**

*******

பொருள் எண்19

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் அமையும் கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சின்னமனூர் நகர்ப்பகுதிக்குள் அமையப் பெற்றுள்ள சாலையான, வர்த்தக சங்கம் முதல் ஆதிலா லாட்ஜ் வரை சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் பொது மக்கள் சாலையினை கடப்பதற்கு மிகவும் சிரமத்திற்கு உள்ளாவதாலும் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, ஆக்கிரமிப்புகளை அகற்றுவது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் 06.09.2021 தேதியன்று நடைபெற்ற சாலை பாதுகாப்பு சட்டம் மற்றும் ஒழுங்கு கூட்டத்தில் மேற்காணும் பொருள் கலந்துரையிடப்பட்டதில் நெடுஞ்சாலைத் துறையுடன் சின்னமனூர் நகராட்சி இணைந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நெடுஞ்சாலைத் துறையின் மூலம் ஆக்கிரமிப்புகளை அகற்றப்பட்ட பின்பு, சாலையின் பக்கவாட்டில் உள்ள மண் குவியல்கள், கற்கள் அப்புறப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக வீடியோ காட்சிகள் பதிவு செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ள 12.11.2021ம் தேதியன்று வரப்பெற்ற கீழ்க்காணும் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | பணியின் விவரம் | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | கே.வனராஜ், ஒப்பந்ததாரர், வ.எண்.14, நடுத்தெரு, சின்னமனூர் | 1.ஜே.சி.பி வாடகை ஒரு மணி நேரத்திற்கு | ரூ.1150/– |
| | | 2. டிராக்டர் வாடகை ஒரு மணி நேரத்திற்கு | ரூ.650/– |
| | | 3. வீடியோ பதிவு செய்வதற்கு ஒரு நாளைக்கு | ரூ.11500/– |
| | | 4.ஆட்டோ மூலம் விழிப்புணர்வு ஒரு நாளைக்கு | ரூ.1650/– |
| 2. | ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரர், பரமத்தேவன்பட்டி | 1.ஜே.சி.பி வாடகை ஒரு மணி நேரத்திற்கு | ரூ.1100/– |
| | | 2. டிராக்டர் வாடகை ஒரு மணி நேரத்திற்கு | ரூ.600/– |
| | | 3. வீடியோ பதிவு செய்வதற்கு ஒரு நாளைக்கு | ரூ.11000/– |
| | | 4.ஆட்டோ மூலம் விழிப்புணர்வு ஒரு நாளைக்கு | ரூ.1600/– |

**அலுவலகக் குறிப்பு:–** **மேற்கண்ட விவரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.2–இல் காணும் திரு.ஆர்.பரமானந்தன், பரமத்தேவன்பட்டி என்பவரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3106/2020/எப்1)**

**தீர்மான எண், நாள்** **465, நாள்.07.01.2022**

**தீர்மானம்**

*******

**பொருள் எண்.20**

இந்நகராட்சியில் கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி மையத்திற்கு செலுத்தப்படவேண்டி வருடாந்திர பங்களிப்புத் தொகை கீழ்க்கண்ட விவரப்படியான தொகை செலுத்தப்படவேண்டியுள்ளது. மேற்படி தொகையினை வங்கி வரைவோலையாக (Demand Draft) செலுத்தும்படி கோயம்புத்தூர் நகரியல் பயிற்சி மைய இயக்குநர் அவர்களின் ந.க.எண்.276/2020/A2, நாள்.08.12.2021ம் தேதியிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 2020–2021–ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டியது – ரூ.20000/–
2. 2021–2022–ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டியது – ரூ.30000/–

**மொத்தம் – ரூ.50000/–**

மேற்படி தொகை ரூ.50000/–ஐ வங்கி வரைவோலையாக செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம்.**
**தீர்மான எண், நாள்** **466, நாள்.07.01.2022**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.21**

சின்னமனூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் தற்போது கொரோனா நோய்த் தொற்று பரவி வருவதால் தூய்மைப் பணியாளர்களுக்கு தேவையான கையுறைகள் 500 மற்றும் கிருமி நாசினியாக உபயோகப்படுத்த 140 லிட்டர் லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்ய 06.01.2022 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**1. கையுறைகள்**

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணம் 1க்கு (ரூ.) |
|---|---|---|
| 1. | குமரன் ஏஜென்சீஸ் மெயின் ரோடு, தேனி | 145/– |
| 2. | கார்த்திக்ராஜா ஏஜென்சீஸ், சின்னமனூர் | 125/– |

**2.லெமன்கிராஸ் ஆயில்**

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | எண்ணம் 1 லிட்டருக்கு (ரூ) |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலாஜி மார்க்கெட்டிங், அய்யம்பாளையம் | 2990/– |
| 2. | ஸ்ரீதாய் மூகாம்பிகை எக்ஸ்போர்ட், பொள்ளாச்சி | 3290/– |
| 3. | சிவசக்தி டிரேடர்ஸ், நாமக்கல் | 2900/– |

அலுவலகக் குறிப்பு:– 1.குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.வரிசை எண்.2 கார்த்திக்ராஜா ஏஜென்சீஸ் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.3, சிவசக்தி டிரேடர்ஸ் நாமக்கல் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3730/2021/எச்1)

தீர்மான எண், நாள் 467, நாள்.07.01.2022

தீர்மானம்

*******

**பொருள் எண்.22**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில், பொது சுகாதாரப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கொசுபுகை மருந்து (Phrethrum 2% Extract) கையிருப்பு குறைந்த அளவே உள்ளதாலும், தற்போது டெங்கு, மலேரியாபோன்ற பூச்சிகளால் பரவும் நோய்கள் பரவுவதாலும், பொது இடங்கள் தடுப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தவும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலனை கருத்தில் கொண்டும், கொசுபுகை மருந்து 200 லிட்டர் மட்டும் தமிழக அரசு மருத்துவ சேவைக் கழகம் (TNMSC) பரிந்துரை செய்துள்ள நிறுவனத்தின் மூலம் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,50,000/– இலட்சத்தினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0553/2022/எச்1)

தீர்மான எண், நாள் 468, நாள்.07.01.2022

*******

**பொருள் எண்.23**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் 14.11.2021 SBM 2.0 திட்ட அறிக்கை தொடர்பாக நகரின் வரை படத்தில் MCC, Public Toilet, Community Toilet, Vehicle Route Chart Google Map ஆகியவை AO அளவில் பிரிண்ட் செய்து CMA அலுவலகம் மற்றும் RDMA அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட வகையில் செலவினம் ரூ.6000/– திரு.ஆர்.மணிகண்டன், துப்புரவு ஆய்வாளர் அவர்களால் செலவு செய்யப்பட்டதை வழங்க அதற்கான உத்தேச செலவினம் ரூ.6000/–னை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4831/2021/எச்1)

தீர்மான எண், நாள் 469, நாள்.07.01.2022

*******

**பொருள் எண்.24**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் **24.11.2021** SBM **2.0** திட்ட அறிக்கை தொடர்பாக நகரின் வரை படத்தில் MCC, Public Toilet, Community Toilet, Vehicle Route Chart Google Map ஆகியவை AO அளவில் பிரிண்ட் செய்து CMA அலுவலகம் மற்றும் RDMA அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்ட வகையில் செலவினம் ரூ.**5000/–** திரு.ஆர்.மணிகண்டன், துப்புரவு ஆய்வாளர் அவர்களால் செலவு செய்யப்பட்டதை வழங்க அதற்கான உத்தேச செலவினம் ரூ.**5000/–**னை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.4912/2021/எச்1)**
**தீர்மான எண், நாள்** **470, நாள்.07.01.2022**

*******

**பொருள் எண்.25**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் டெங்கு நோய் தடுப்பு பணியில் ஈடுபடும் களப்பணியாளர்கள் (DBC) மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் தினக்கூலி அடிப்படையில் ஊதியம் நிர்ணயம் செய்து ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் பணி மேற்கொண்ட வகையில் பணியின் பணி ஒப்பந்தக் காலம் (2 மாதங்கள்) **05.01.2022**ஆம் தேதியுடன் முடிவடைவதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் மற்றும் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கவும், மேலும் கோவிட்–**19** தடுப்பூசி தொடர்பான கணக்கெடுப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், மேற்கண்ட பணியினை ஏற்கனவே ஒப்பந்தப்பணி மேற்கொண்ட பணியினை ஏற்கனவே ஒப்பந்தப்பணி மேற்கொண்ட திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்தக்காரார் அவர்களின் மூலமாக மேலும் மூன்று மாதங்கள் பழைய ஒப்பந்த விகிதத்தில் மேற்படி பணியினை நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1.மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி மேற்கண்ட ஒப்பந்த பணியினை மூன்று மாதம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்காம்.**
**தீர்மான எண், நாள்** **471, நாள்.07.01.2022**

*******